|b09291 58monsoF (English)

|c09291_000_58monso.xml (Task 178893)

|v1

ஞாயிறு மதியக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு மதியக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

மீண்டும் நாம் சந்திக்கும்வரை

|v6

பொது மாநாடு

|v7

தாமஸ் எஸ். மான்சன்

|v8

மீண்டும் நாம் சந்திக்கும்வரை

|v9

தலைவர் தாமஸ் எஸ். மான்சன்

|v10

நமது பரலோகப் பிதாவின் சமூகத்தில் நித்திய ஜீவனே நமது இலக்காயிருப்ப

*தால் இறுதிவரை நாம் நிலைத்திருக்கவேண்டும்.*

|v11

*எனது சகோதர சகோதரிகளே, சபையின் இந்த அற்புதமான பொது மாநாட்டின் ஒரு நிறைவை நாம் கொண்டுவரும்போது எனது இருதயம் நன்றியால் நிறைந்திருக்கிறது. ஒவ்வொரு கூட்டத்திலும் பங்கேற்றவர்களின் ஆலோசனைகளையும் சாட்சிகளையும் நாம் கேட்டுக்கொண்டிருந்தபோது ஆவியில் நாம் போஷிக்கப்பட்டோம். நமக்குப் போதிக்கப்பட்ட சத்தியங்களுக்காக எனது ஆழ்ந்த பாராட்டுதலைத் தெரிவித்தபோது, நிச்சயமாக எங்கிலுமுள்ள சகல அங்கத்தினர்களுக்காகவும் நான் பேசினேன். பென்யமீன் இராஜாவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் ஏகமாய்ச் சத்தமிட்டு சொன்ன, "ஆம் நீர் எங்களுக்குப் பேசின சகல வார்த்தைகளையும் விசுவாசிக்கிறோம், சர்வவல்ல கர்த்தருடைய ஆவியானவரினிமித்தம். அவைகளின் உண்மையையும் சத்தியத்தையும் அறிவோம்"1 என்ற மார்மன் புத்தகத்தில் காணப்படுகிற வார்த்தைகளை நாம் எதிரொலிக்கலாம்.*

|v12

*கவனமாகப் படிக்க நினைப்பவர்களுக்காக என்சைன் மற்றும் லியஹோனா பத்திரிகைகளின் நவம்பர் மாத வெளியீட்டில் அச்சடிக்கப்படப் போகிற மாநாட்டு உரைகளைப் படிக்க நாம் ஒவ்வொருவரும் நேரம் ஒதுக்குவோமென நான் நம்புகிறேன்.*

|v13

*சமாதானத்திலும் ஆறுதலிலும் பாதுகாப்பிலும் இந்த மகத்தான மாநாட்டு மையத்தில், இங்கே நம்மால் கூடமுடிகிறது என்ன ஒரு ஆசீர்வாதம். மாநாட்டின் புதுமையான படப்பிடிப்பு துணைக் கண்டங்களுக்கும் சமுத்திரங்களுக்கும் அப்பாலுள்ள எங்குமுள்ள மக்களை அடைகிறது. உங்களில் அநேகருக்கு மிக தூரத்தில் நாங்களிருந்தாலும் உங்கள் ஆதரவை உணர்ந்து, எங்களின் அன்பையும் பாராட்டுதலையும் உங்களுக்கு அனுப்புகிறோம்.*

|v14

*இந்த மாநாட்டில் விடுவிக்கப்பட்ட உங்களின் அர்ப்பணிப்பான அநேக ஆண்டுகளின் சேவைக்காக எங்கள் அனைவரின் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். கர்த்தரின் பணிக்கு உங்களின் பங்கால் எண்ணிலடங்காதவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.*

|v15

*கூட்டங்களில் பங்கேற்ற ஆசாரியத்துவ கூடார பாடற்குழுவும், பிற பாடற்குழுவும், நடந்து முடிந்த அனைத்தையும் மேன்மைப்படுத்தும்படியும் அழகுபடு*

த்தும்படியும் உண்மையான பரலோக இசையைக் கொடுத்தார்கள். உங்கள் இசையின் திறமையையும் ஆற்றலையும் எங்களோடு பகிர்ந்துகொண்டதற்காக உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

|v16

எனது விசுவாசமிக்க ஆலோசகர்களான தலைவர் ஹென்றி பி. ஐரிங்க்கும் தலைவர் டியட்டர் எப். உக்டர்ப்புக்கும் எனது அன்பையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையிலேயே அவர்கள் ஞானத்தின், புரிந்துகொள்ளுதலின் மனிதர்கள். அவர்களின் சேவை விலைமதிப்பற்றது. அவர்களின் ஆதரவும் துணையுமில்லாமல் எனக்கு வேண்டுகோள் விடப்பட்ட காரியங்கள் அனைத்தையும் என்னால் செய்ய முடியாது. பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் சகோதரர்களையும், எழுபதின்மரின் குழுமங்களிலும், ஆயத்துவ தலைமையிலுமுள்ள அனைவரையும் நான் நேசிக்கிறேன், போற்றுகிறேன். அவர்கள் சுயநலமில்லாமலும், ஆற்றலுடனும் சேவை செய்கிறார்கள். அப்படியே, பொது துணைச்சங்க அலுவலர்களாக சேவை செய்கிற ஆண்களுக்கும் பெண்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

|v17

இயேசு கிறிஸ்துவின் மறுஸ்தாபிக்கப்பட்ட சுவிசேஷம் நமக்கிருப்பதில் எவ்வளவாய் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். நாம் எங்கிருந்து வந்தோம், நாம் ஏன் இங்கிருக்கிறோம், இந்த வாழ்க்கையை கடந்துபோகும்போது நாம் எங்கே போவோம் என்ற கேள்விகளுக்கு அது பதில்களைக் கொடுக்கிறது. நமது வாழ்விற்கு அர்த்தத்தையும் நோக்கத்தையும், நம்பிக்கையையும் அது கொடுக்கிறது.

|v18

துன்பங்களும் அநேக சவால்களும் நிறைந்த ஒரு உலகத்தில் நாம் வாழுகிறோம். நமது சிறந்த திறமைக்கான நமது தனிப்பட்ட சவால்களை சமாளிக்கவும், அவைகளிலிருந்து கற்றுக்கொள்ளவும் அவைகளை மேற்கொள்ளவும் இங்கே இந்த பூமியில் நாமிருக்கிறோம். நமது பரலோகப் பிதாவின் சமூகத்தில் நித்திய ஜீவனே நமது நோக்கமாயிருப்பதால் முடிவுபரியந்தம் நாம் நிலைத்திருக்கவேண்டும். அவர் நம்மை நேசிக்கிறார். இந்த நோக்கத்தில் நாம் முன்னேறிச் செல்லவேண்டுமென்பதைவிட எதையும் அவர் எதிர்பார்க்கவில்லை. நமது ஜெபங்களில் அவரை நாம் அழைக்கும்போது, அவரது வார்த்தைகளை நாம் படிக்கும்போது, அவரது கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படியும்போது அவர் நமக்கு உதவி, நம்மை ஆசீர்வதிப்பார். இந்த காரியங்களை செய்வதால், பாதுகாப்பைக் காண்போம், சமாதானத்தைக் காண்போம்.

|v19

எனது சகோதர சகோதரிகளே தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. எனது சார்பிலும் பொது அதிகாரிகள் அனைவரின் சார்பிலும் உங்கள் ஜெபங்களுக்காக

உங்களுக்கு நன்றி சொல்லுகிறேன். உங்களுக்காகவும், பூமியில் தேவனின் ராஜ்யத்திற்காக நீங்கள் செய்யும் அனைத்திற்காகவும் நாங்கள் ஆழ்ந்த நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

|v20

பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் உங்களோடிருப்பதாக. உங்கள் வீடுகள் அன்பிலும், பண்பிலும், கர்த்தரின் ஆவியிலும் நிறைந்திருப்பதாக. உங்களுக்கு விரோதமான சாத்தானின் துன்புறுத்துதலுக்கு எதிரான ஒரு பாதுகாப்பாக இருக்கும் சுவிசேஷத்தின் சாட்சிகளைத் தொடர்ந்து போஷிப்பீர்களாக.

|v21

மாநாடு இப்போது நிறைவடைந்துவிட்டது. நமது வீடுகளுக்கு நாம் திரும்பும்போது பாதுகாப்பாக நாம் செல்வோமாக. ஒவ்வொரு நாளும் நம் மனதில் இடம் பிடித்த அந்த காரியங்களை நாம் சிந்திக்கும்போது, இங்கே நாம் உணர்ந்த பரிசுத்த ஆவி நம்மோடிருப்பதாக. அதிகரித்த அன்பை நாம் ஒருவருக்கொருவர் காட்டுவோமாக; எப்போதுமே கர்த்தரின் பணியைச் செய்துகொண்டிருப்போமாக.

|v22

நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். ஆறுமாத காலங்களில் மீண்டும் நாம் சந்திக்கும்வரை உங்களுக்கு பிரியாவிடை கொடுக்கிறேன். நமது கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்.

|v23

குறிப்பு

|v24

1.

|v25

மோசியா 5:2

|v26

லியஹோனா

|v27

*நவம்பர் 2010*